**செ.வெ. எண் : 490** **நாள் : 4. 8 ..2007**

# செய்தி வெளியீடு

**தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்சைடு தொழிற்சாலை அமைப்பது குறித்து மக்களின் கருத்துக்களை அறிந்திட அப்பகுதிக்கு அமைச்சர்கள் சிலரையும், மூத்த அதிகாரிகளையும் அனுப்பி செய்தியாளர் மற்றும் பொது மக்களின் முன்னிலையில் கருத்துக் கணிப்பு நடத்தி, அதன் பின்னர் குழுவினரிடமிருந்து அறிக்கையைப் பெற்று இத்திட்டம் குறித்து முடிவெடுப்பதாக முதலமைச்சர் கலைஞர் 30.7.2007 அன்று அறிவித்தார்.**

**அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று மக்களிடம் கருத்து கணிப்பு நடத்துவதற்காக உயர்கல்வி மற்றும் கனிமத்துறை அமைச்சர் திரு.க. பொன்முடி, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன், கால்நடைத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன் ஆகியோரையும், தொழில்துறைச் செயலாளர், வருவாய்த்துறை செயலாளர், கனிமத்துறை ஆணையர் ஆகிய உயர் அதிகாரிகளையும் கொண்ட ஆய்வுக்குழு ஒன்றினை அமைத்து முதலமைச்சர் கலைஞர் இன்று அறிவித்துள்ளார். இந்த ஆய்வுக்குழு விரைவில் அந்தப்பகுதி கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கை அளிக்கும்.**

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.